

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் இந்துக்கல்லூரி அருகில் உள்ள அனாதைமடம் மைதானத்தில் நடைபெற்று வரும் அரசு பொருட்காட்சியில், அமைக்கப்பட்டிருந்த அரசுத்துறை அரங்குகளை பொதுமக்கள் ஆர்வத்துடன் இன்று (24.05.2016) பார்வையிட்டபோது எடுத்த படம்.

செ.வெ.எண்: 297/ 2016 நாள்: 24.05.2016

**நாகர்கோவிலில் நடைபெற்று வரும் அரசு பொருட்காட்சியில்**
**இதுவரை 24 ஆயிரத்து 486 பேர் பார்வையிட்டுள்ளார்கள்.**
**இதனால் ரூ. 3 இலட்சத்து 39 ஆயிரத்து 385/- அரசுக்கு வருவாய் ஈட்டியுள்ளது.**

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் இந்துக்கல்லூரி அருகில் உள்ள அனாதைமடம் மைதானத்தில் தமிழ்நாடு அரசின் சார்பாக, இரண்டாவது முறையாக அரசு பொருட்காட்சி நடைபெற்று வருகிறது. பொருட்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்களால் 29.04.2016 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இப்பொருட்காட்சியில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சுற்றுலாத் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வனத்துறை, வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, காவல்துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, கூட்டுறவுத் துறை, வருவாய்த் துறை, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, தோட்டக்கலைத் துறை, பொதுப்பணித் துறை, இந்து சமய அறநிலையத் துறை, பள்ளிக் கல்வித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, போக்குவரத்துத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சுற்றுச்சூழல் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மீன்வளத்துறை என அரசுத் துறைகள் மற்றும் அரசு சார்ந்த துறைகள் என 27 துறைகளுக்கு அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அரசு துறைகளுக்கும் தலா ரூ. 66 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பொருட்காட்சியை காணவருபவர்களுக்கு நுழைவு கட்டணமாக சிறுவர்களுக்கு ரூ.10/-ம், பெரியவர்களுக்கு ரு.15/-ம் வசூல் செய்யப்படுகிறது. பொருட்காட்சி தினமும் மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை திறந்திருக்கும்.

இதுவரை (23.05.2016) 24 ஆயிரத்து 486 பேர் பார்வையிட்டுள்ளார்கள். இதனால் ரூ. 3 இலட்சத்து 39 ஆயிரத்து 385/- அரசுக்கு வருவாய் ஈட்டியுள்ளது.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.